[1973 நவம்பர் 21

Financial assistance to Madras Cricket Club

* 255. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Government have given any financial assistance to the Madras Cricket Club during the years 1970–71, 1971–72; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) மற்றும் (ஆ) சென்னை கிரிக்கெட் சங்கத்திற்கு 1970-71 மற்றும் 1972-ம் ஆண்டில் யாதொரு நிதி உதவியும் அளிக்கப்படவில்லை. தமிழ் நாடு கிரிக்கெட் சங்கத்திற்கு சேப்பாக்கம் மைதானத்தில் கிரிக்கெட் ஸ்டேடியம் கட்டுவதற்காகக் கீழ்க்கண்டவாறு ரூ. 15 இலட்சம் அரசு மான்யமாக வழங்கப்பட்டுள்ளது:—

ச. எண்.	ஆண்டு.	வழங்கப்பட்ட தொகை.
		ரூ.
1.	1971-72	7 இலட்சம்.
2.	1972-73	5 இலட்சம்.
3.	1973-74	3 இலட்சம்.
	மொத்தம்	15 இலட்சம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Eradication of leprosy

* 256 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to evolve a crash programme for the eradication of leprosy in this State; and

(*b*) if so, the details thereof?

1973 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) அது போன்ற தீவிரத் திட்டம் எதுவும் தீர்மானிக்கப்படவில்லை.

(இ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் தமிழ் நாட்டில் உள்ள கிராமப் பகுதிகள் முழுவதிலும் உள்ள தொழு நோயாளிகளின் பயனுக்காகப் பல தொழுநோய்த் தடுப்புப் பிரிவுகள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள நகர்ப்புற பகுதிகள் 1983-ம் ஆண்டிற்கு முன்னதாகப் பயனடைய திட்டமிடப்பட்டிருக்கிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, தொழுநோய் மிக அதிகமாக இந்த மாநிலத்தில் பரவும் என்பதைக் கருத்திற் கொண்டு, இதைக் கட்டுப்படுத்த சிறப்புத் திட்டத்தை உடனடியாக அமல்படுத்துமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தொழு நோய் அதிகமாகப் பரவுகிறது, தீவிரமாகப் பரவுகிறது என்ற எண்ணம் பொதுவாக நிலவுகிறது. ஆனால் அதுவல்ல முழு உண்மை. ஆனால் யார் யாருக்கு அந்நோய் ஏற்பட்டிருக்கிறது என்பது அண்மைக் காலத்திலேதான் பரிசோதனைக்கு உள்ளாகி வருகிறது. அந்தக் கணக்குப்படி ஏற்கனவே இருந்ததைவிட அதிகமாகி விட்டது என்று கருதிவிடக்கூடாது. ஆனால் அதற்காக ஏற்படுத்தப்பட்ட ஸ்டடி சென்டர், கண்ட்ரோல் யூனிட், சப்சிடியரி சென்டர், எஸ். இ. டி. யூனிட் ஆகிய இந்த அமைப்புகள் எந்த அளவிற்கு அதிகமான மக்களிடம் சென்று, அவர்களுக்கு அதிகமாகப் பயன்பட முடியுமோ அந்த அளவிற்கு விரிவாகத் திட்டமிடப்பட்டு செயலாற்றுகின்றன.

திரு. க. உரோ. எட்மண்ட் : தலைவரவர்களே, இந்தத் தொழு நோயைக் கட்டுப்படுத்த தீவிரத் திட்டம் அரசாங்கத்திடம் இல்லை என்றாலும், சில தனிப்பட்ட மெஷினரிகள் தொழுநோய் மருத்துவ மனைகளை நடத்தி வருகிறார்கள், அவர்களுக்கு அரசின் உதவி வழங்கப்படுகிறதா ? இல்லையென்றால் இனிமேலாவது வழங்கப் படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தீவிரத் திட்டம் என்பது 'ப்ரிவென்ஷன்' என்ற முறையில், அடியோடு தடுக்கப்படக் கூடிய திட்டம் இப்பொழுது இல்லை. ஆனால் ஏற்படு

கின்ற அந்தத் தொழுநோய்க்கு கூடியவரையில் சிகிச்சை அளிக்கும் திட்டம் இன்றைக்கு இருக்கிறது. தொழுநோய் மருத்துவமனைகள் நடத்தும் வெளிநாட்டு அமைப்புகளைச் சேர்ந்தவர்களுக்கு தமிழக அரசு சில முறைகளை வைத்திருக்கிறது, அதன்படி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

* 257 *Q.*—Thiru A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that in the recent investigation conducted in Tamil Nadu by the Central Health Ministry, it has been found that the number of leprosy patients is more than what it was in the previous years; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : *(அ) இது சம்பந்தமாக மத்திய சுகாதார அமைச்சரகம் தமிழ் நாட்டில் புலனாய்வு எதுவும் செய்யவில்லை.*

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *அடுத்த கேள்வியையும் எடுத்துக் கொள்ளலாம்.*

* 258. *Q.*—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that leprosy patients are on the increase in the Government Hospitals in the City of Madras; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : *(அ) இல்லை.*

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : *தலைவரவர்களே, இப்பொழுது தமிழ் நாட்டிலே காசநோய்த் தடுப்புக்காகத் தீவிரமாகச் செயல்படுத்தும் அந்த முறைகளைக் கொஞ்சம் தாமதப்படுத்தி, அதற்குப் பதிலாக தொழு நோயாளிகளைக் கவனிக்கும் தீவிரத் திட்டத்தைப்பற்றி மத்திய அமைச்சரோடு கலந்துரையாடி ஒரு முறையை வகுக்க நமது அரசு முன்வருமா ?*